**Previous Examination date – 22.10.2019**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 167 of 2013**

**Deposition of Witness P.W.5**

| | |
|---|---|
| **Name : அன்னலட்சுமி** | **Father/Husband's Name : கணேசன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 14.10.2025.**

**Accused absent. 317 Cr.P.C. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது திண்டுக்கல் பொருளாதார குற்ற பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.06.2012ம் தேதி 11.30 மணிக்கு பழனி நகர் காவல் நிலைய பொறுப்பில் இருந்த போது பழனி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் Crl.mp.No.2569/2012 என்ற எண்ணில் இருந்து வரபெற்ற தபாலை பெற்று புகார்தாரர் உமா மகேஸ்வரி என்பவரது புகாரினை பார்வையிட்டு பழனி நகர் காவல் நிலைய கு.எண்.495/2012 பிரிவுகள் 190,509,506(1) இ.த.ச. மற்றும் பிரிவு 4 TNPHW Actன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **புகார் மனு அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தற்போது என்னிடம் காட்டப்படும் அச்சு முதல்தகவல்அறிக்கை அவர் தயார் செய்தது தான். **அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு புகார்தாரரான உமா மகேஸ்வரியை விசாரணை செய்ய வேண்டி அழைத்தும் மற்றும் அவரது வீட்டிற்கு சென்று அவரிடம் விசாரணை செய்ததில் அவர் சம்பவம் பற்றி கூறவும், அவர் விசாரணைக்கு மறுத்ததால் இது சம்மந்தமாக விரிவான அறிக்கையை பழனி குற்றவியல் நடுவர் அவர்களுக்கு 11.06.2012ம் தேதி அனுப்பி வைத்தேன். பின்னர் வழக்கின் கோப்பை மதுரை உயர் நீதிமன்றம் Crl.OP.No.7713/2012 ல் 26.06.2012ம் தேதி மற்றும் உத்தரவினையும் மற்றும் திண்டுக்கல் காவல் கண்காணிப்பாளர் அவர்களின் குறிப்பாணை C1/22471/659/2012 தேதி : 20.07.2012 உத்தரவு படியும் வழக்கு கோப்பை விசாரணைக்காக திண்டுக்கல் மாவட்ட குற்ற பிரிவு

காவல் ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. சம்பவம் நடந்ததாக சொன்ன தேதியில் இருந்து ஒரு நாள் தாமதமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கும் பழனி நகர் காவல் நிலையத்திற்கும் உள்ள தூரம் சுமார் 500 மீட்டர் இருக்குமா என்றால் ஆமாம். புகாரில் இந்த வழக்கின் புகார்தாரருக்கு எதிரி தாக்கியதாகவோ, கையை பிடித்து இழுத்ததாகவோ, புகார்தாரருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டதாகவோ குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் எதிரி தாக்கியதாகவோ, கையை பிடித்து இழுத்ததாகவோ, புகார்தாரருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டதாகவோ தெரிய வந்ததா என்றால் புகார்தாரர் புலன் விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை. புகார்தாரரை இந்த வழக்கு சம்மந்தமாக தகவல் சொல்லி இந்த விசாரணைக்கு அழைத்தேன் என்றால் சரிதான். 05.06.2012ம் தேதி காவல் அழைப்பாணை பிறப்பித்து மேற்படி அழைப்பாணையை காவலர் பழனிவேல் என்பவர் மூலம் புகார்தாரருக்கு சார்பு செய்த பின்பு புகார்தாரர் விசாரணைக்கு ஆஜர் ஆகவில்லை என்றால் சரிதான். 10.06.2012ம் தேதி நானும், சார்பு ஆய்வாளர் ஆறுமுகம் என்பவரும் புகார்தாரர் வீட்டிற்கு நேரில் சென்று விசாரித்தபோது அவர் விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை என்றால் இங்கு விசாரிக்க வேண்டாம் மாலையில் காவல் நிலையம் வருகிறேன் என்று சொல்லிவிட்டார். புகார்தாரர் அன்று மாலை காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு வந்தாரா என்றால் வரவில்லை. புகார்தாரர் இந்த புகாருக்கு ஆதரவாக வாக்குமூலம் வழங்கவில்லை என்றாலும் ஆவணம் எதுவும் வழங்கவில்லை என்றாலும் சரிதான்.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2025.10.14 18:23:50 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.